**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 37/2021 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: |
| Name | : லதா | Age |
| Father's/Husband's Name | : சாமிநாதன் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 02/11/2022**

சாட்சியை திருநீலக்குடி காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பனகாட்டான்குடியில் வசித்து வருகிறேன். நான் லேப் டெக்னிசியனா வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரிகளை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறார்.**) கடந்த 06/07/2019 ம் தேதி நான் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு இரவு 08.15 மணிக்கு வந்தேன். எனது கொல்லையில் ஆடு கத்தும் சத்தம் கேட்டது- நான் என்னவென்று சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் வீட்டு மாடு எனது ஆட்டை முட்டி கொண்டு இருந்தது. நான் எதிரிகளிடம் வேலி போடும்படி சொன்னேன். நான் அந்த மாட்டை கொண்டு வந்து எனது வீட்டிற்கு எதிரில் கட்டிபோட்டேன். என்னை எதிரி நடராஜன் குச்சிக்காரி, தேவடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். மாட்டை பஞ்சாயத்துகாரர்களை வைத்து அவிழ்த்து கொள்ள வேண்டும் என்றும், நான் பலமுறை சொல்லியும் நீங்கள் கேட்கவில்லை என்று கூறினேன். அதற்கு 1ம் எதிரி நடராஜன் உன்னால் என்ன செய்ய முடியும் என்று கூறி என்னை

கீழே தள்ளி எனது கீழ்உதட்டை கடித்து துப்பிவிட்டார். அதில் எனது கீழ் உதடு துண்டாகிவிட்டது. அதில் ரத்தகாயம் ஏற்பட்டது. ரேவதி என்னை பிடித்து கீழே தள்ளி உன்னால் என்ன முடியும் என்று என்னை திட்டினார். ரேவதியும் அவரது மகள் கீர்த்தனா என்பவரும் எனது வீட்டுக்காரரை இழுத்து தள்ளி விளக்குமாற்றால் அடித்தார்கள். முதலில் நான் திருநீலக்குடி காவல் நிலையத்திற்கு போனேன். அவர்கள் என்னை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு போனேன். அங்கிருந்து மேல்சிகிச்கைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு போனேன். நான் சிகிச்சையில் இருக்கும்போது 07ம் தேதி போலிசார் வந்து விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் குவிமுச பிரிவு 319 ன் படி மனுதாக்கல் செய்வதற்கு வேண்டுகோள் விடுத்தன் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**